**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 43/2019 P.W. 1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | **திரு. மோயிசன் கிங்ஸ்லின்** | **Caste** | **:** | |
| **Father's Name** | **:** | த/பெ. தனிஸ்லாஸ் | **Calling** | **:** | |
| **Village** | **:** | | **Religion** | **:** | |
| **Taluk** | **:** | | **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 06.06.2023.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து ஓட்டுனராக தொழில் செய்து வருகிறேன். ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களைத் தெரியும். அவர்கள் எனது பக்கத்து ஊர்காரர்கள். ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர் சுனிலின் சித்தி ஹெப்சிபாய் வீட்டு பக்கம் எனது வீட்டிற்குச் செல்லும் வழி உள்ளது. அந்த வழியில் தேக்கு மற்றும் வேறு செடிகள் வைத்திருந்தேன். அதை சுனிலின் சித்தி ஹெப்சிபாய் ஒடித்து அல்லது செடியின் மீது வெந்நீரை ஊற்றுவார், இது சம்மந்தமாக அவரிடம் கேட்டதில் பிரச்சினை ஏற்பட்டது.

2. 01.12.2012 ம் தேதி இரவு 10.45 மணி அளவில் நானும் எனது மனைவி மற்றும் மாமியார் வீட்டிலிருக்கும் போது ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மூன்று பேரும் என் வீட்டிற்கு வந்தார்கள். ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் சுனில் மற்றும் சுனில் கையில் இரும்பு கம்பி வைத்திருந்தார்கள். ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர் எதிரி சுனில் புண்டாமவனே உன்னை கொல்லாமல் விடமாட்டேன், உன் குடும்பத்தை வாழவிடமாட்டேன் என்று கெட்டவார்த்தைகள்பேசினார்.

3. இதனால் எனக்கு மன உளைச்சல் ஏற்பட்டது. என் வீட்டு முன்பாக டி.என் 60 சி. 4779 எண் கொண்ட வெள்ளை நிற அம்பாசிடர் காரை ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மூன்று நபர்களும் சேர்ந்து கம்பியாலும், கல்லாலும் காரின் கண்ணாடிகள் அனைத்தையும் அடித்து

உடைத்தார்கள். மேலும் கதவு, ஜன்னலை அடித்து உடைத்து சேதப்படுத்தினார்கள். மேலும் காரை பயன்படுத்த முடியாத அளவிற்கு சேதப்படுத்தினார்கள். இதனால் எனக்கும் என் குடும்பத்தினருக்கும் பயம் ஏற்பட்டது. குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீது காவல்நிலையத்தில் புகார் மனுக் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும புகார் மனு நான் கொடுத்தது தான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u> : <u>குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்</u>**

**1. போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் 02.12.2012 ம் ஆண்டு காலை 09.00 மணி அளவில் எனது வீட்டில் வைத்து விசாரித்தார்கள். நான் கொடுத்த புகார் மனுவிலோ, போலீசார் விசாரணையிலோ வழக்கு சம்பவம் 01.12.2012 ம் தேதி இரவு 10.45 மணிக்கு நடந்ததாக நான் சொன்னேனா என்றால் இல்லை. 10.15 மணிக்கு நடந்ததாக சொன்னேன்.**

2. **நான் சொல்வது போல் இந்த வழக்கில் ஆஜர்** குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் என்னை எந்தவித ஆபாச வார்த்தைகளாலும் திட்டவில்லை என்றால் சரியல்ல. நான் என்னுடைய முதல்விசாரணை சாட்சியத்தில் சொல்லியுள்ள படி ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் எனது வீட்டு ஜன்னல் கண்ணாடிகளை கம்பியாலும், கல்லாலும் அடித்து உடைத்ததாக சொல்லியுள்ளேனா என்றால் -ஆம் சொலலியுள்ளேன். - **மேற்படி கற்றறிந்த வழக்கறிஞர் அ.சா.ஆ.1 ஆன புகார்மனுவை அவரிடம் காண்பித்து படிக்கச் சொல்லி அவ்வாறு எதுவும் சொல்லப்பட்டுள்ளதா என்று கேட்கிறார். மேற்படி சாட்சி படித்துப்பார்த்துவிட்டு கம்பி என்று மட்டும் சொல்லப்பட்டுள்ளது. கல் சொல்லப்படவில்லை என்று கூறுகிறார்.**

3. மேற்படி சங்கதியை வழக்கிற்காக மிகைப்படுத்தி நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் ஹெப்சிபாய் வீட்டிற்கும் உள்ள வழி எத்தனை அடி வீதி இருக்கும் என்றால் - ஓரே காம்பவுண்ட் தான் ஒருபக்கம் அவர் வீடும் இன்னொரு பக்கம் எனது வீடும் உள்ளது. மேற்படி வழிப்பாதையில் நாங்கள் பூச்செடிகள், தேக்குமரம் ஆகியவை நட்டுள்ளோம் என்று சொன்னால் - சரிதான். மேற்படி தேக்கு மரம் பெரிதாக வளர்ந்துவிட்டால் நான்கு சக்கர வாகனங்கள் செல்லமுடியாது என்று சொன்னால் சரிதான்.

4. பட்டியல் சாட்சி 2 எனது மனைவி ஆவார். பட்டியல் சாட்சி 3 எனது மாமியார் ஆவார். பட்டியல் சாட்சி 4 எனது அண்ணி ஆவார். பட்டியல் சாட்சி 5 எனது சித்தப்பா ஆவார். பட்டியல் சாட்சி 6 எனது நண்பர் ஆவார். எனது வீட்டு பக்கத்தில் ராயப்பன் வீடு, ஜார்ஜ், வர்க்கீஸ் ஆகியோர் வீடுகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் சொல்வதாக சொல்லப்படும் வழக்கு சம்பவத்தைப் பொறுத்து மேற்படி வீட்டிலுள்ள நபர்கள் அதை பார்த்தார்களா என்றால் ஜார்ஜ் வீட்டில் அல்போன்சாள் பார்த்தார். மற்றவர்களுக்குத் தெரியாது.

5. ராயப்பன் வீட்டில் அவர்கள் யாரும் வசிக்கவில்லை என்பதால் அவர்களுக்கு தெரியாது. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் மேற்படி ராயப்பன் அவர் வீட்டில் இருந்தார் என்றும் வர்க்கீஸ் வீட்டில் தான் இருந்தார் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நடந்ததாக சொல்லப்படும் சம்பவ காலத்தில் எங்கள் வீட்டை சுற்றி காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் சரிதான். மேற்படி காம்பவுண்ட் சுவரானது சுமார் 6, 7 அடி உயரம் இருக்கும் என்றால் எல்லா இடத்திலும் அது போல் இல்லை. வர்க்கீஸ் வீட்டு முன்பு 10 அடியும், ஹெப்சிபாய் வீட்டு பக்கம் 5 அடியும், ஜார்ஜ் வீட்டுபக்கம் 10 அடியும், என் வீட்டின் வடக்குபக்கம் முள்வேலியும் உள்ளது.

6. மேற்படி சம்பவயிடத்தைப் பொறுத்து இலந்தவிளை செல்லும் பாதை என்று போடப்பட்டுள்ளதை குறித்து அது இலந்தவிளையா அல்லது பாளையமா என்றால் நான் சிறுபிள்ளையாக இருக்கும் போது இலந்தவிளைஎன்று சொன்னார்கள். தற்சமயம் ஜார்ஜியார் குருசடி இலந்தவிளை என்றும் நான் இருக்கும் இடம் பாளையம் என்றும் குறிப்பிடப்படுகிறது. மேற்படி ஜார்ஜியார் குருசடியில் இருந்து மேற்கு பார்த்துச் சென்றால் எனது வீடு உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் என் வீட்டில் யார் யார் எல்லாம் இருந்தோம் என்றால் நான், எனது மனைவி, எனது மாமியார் இருந்தோம்.

7. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நாங்கள் எத்தனை மணிக்கு தூங்க சென்றோம் என்றால் 11.00 மணிக்கு. சம்பவம் நடத்தாக சொல்லப்படும் நேரத்தில் நாங்கள் வீட்டிற்கு உள்ளே இருந்தோமா, வெளியில் இருந்தோமா என்றால் வீட்டிற்குள் இருந்தோம். அவ்வாறு நாங்கள் வீட்டிற்குள் இருந்ததால் யார் யார் என்ன செய்தார்கள் என்று எங்களுக்கு தெரியாது என்று சொன்னால் - சரிதான். சத்தம் கேட்டது. நான் முதல் விசாரணையில் சொன்ன எனது அம்பாசிடர் வாகனத்தைப் பொறுத்து அது யார் பெயரில் உள்ளது என்று சொன்னால் சரியாக ஞாபகமில்லை.

8. நான் சொன்னது போல் எனது பெயரில் எந்தவித வாகனமும் இல்லை என்றாலும், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில், நாளில் அவ்வாறு ஒரு வாகனமே அந்தயிடத்தில் இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடத்தாக சொல்லப்படும் காலத்தில் என்னிடத்தில் செல்லிடைப்பேசி இருந்ததா என்றால் - ஆம். எனது வீட்டிற்கும் இரணியல் காவல்நிலையத்திற்கும் இடையே 3 கி.மீ தூரம் இருக்கும்.

9. நான் சொன்ன மேற்படி அம்பாசிடர் வாகனத்தை போலீசார்கைப்பற்றி அதை வழக்கில் சேர்த்தார்களா என்றால் - இல்லை. நான் சொன்ன முதல்விசாரணை சங்கதியில் உள்ளது போல் எந்தவித வழக்கு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் என் பெயரில் எனக்கு சொந்தமாக ஒரு வாகனமே இல்லை என்பதால் தான் வழக்கில் சேர்க்கவில்லை என்றாலும் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் எந்த நேரத்திலும் எந்த சமயத்திலும் நான் முதல்விசாரணையில் சொன்னது போல் என்னை ஆபாசமாக திட்டவில்லை என்றாலும், என்னுடைய பொருட்களை சேதப்படுத்தவில்லை என்றாலும், எந்தவித குற்றமுறு அச்சுறுத்தலும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

10 எனக்கும் மேற்படி ஹெப்சிபாய்க்கும் இடையே இருந்த முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அவரது உறவினர்கள் என்பதற்காக

நடக்காத சம்பவத்தை நடந்ததாக கூறி பொய் மனுக் கொடுத்து அதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,

இரணியல்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 43/2019 P.W. 2/L.W.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திருமதி. அனுஷா** | **Caste** | : | |
| **Father's Name** | : | **க/பெ.மோயிசன் கிங்ஸ்லின்** | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 06.06.2023.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா1 எனது கணவர். ஆஜர் குற்றம் சாட்டப்பட்ட நபர்களை எனக்குத் தெரியும். அவர்கள்எனது பக்கத்து ஊரைச் சார்ந்தவர்கள். ஆஜர் குற்றம் சாட்டப்பட்ட நபர் சுனிலின் சித்தி எங்கள் வீட்டு அருகில் வசித்து வருகிறார். எங்கள் வீட்டிற்கு செல்லும் வழியில் உள்ள செடிகளை சுனிலின் சித்தி ஒடித்து விடுவார். இது சம்மந்தமாக எனது கணவருக்கும் அவருக்கும் பிரச்சினை ஏற்பட்டது .

2. சுமார் 10 வருடங்களுக்கு முன்பு இரவு 10.15 மணி அளவில் நானும் அ.சா1ம், எனது அம்மா வசந்தாவும் எங்கள் வீட்டில் இருந்தபோது ஆஜர் குற்றம் சாட்டப்பட்ட 3 நபர்களும் கையில் இரும்பு கம்பியுடன் வந்தார்கள். ஆஜர் குற்றம் சாட்டப்பட்ட எதிரி சுனில் எனது கணவரைப் பார்த்து வெளியே இறங்குடா புண்டாமவனே என்று கெட்டவார்த்தைகள் பேசினார். நாங்கள் வீட்டிற்குள் இருந்தோம். கதவை எல்லாம் சாத்திவிட்டோம். வீட்டு ஜன்னல் கண்ணாடிகளை ஆஜர் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் 3 பேரும் உடைத்தார்கள். காரையும் உடைத்தார்கள். இது சம்மந்தமாக எனது கணவர் காவல்நிலையம்சென்று புகார் மனு அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை :குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. என்னை எத்தனை மணிக்கு எந்த தேதியில் எங்கு வைத்து போலீசார் விசாரித்தார்கள் என்றால் - சம்பவம் நடந்த அன்றே நாங்கள் மனு கொடுக்க அன்று இரவே வந்தோம். நிலையத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள். எனது கணவரின் பெயரில் ஏதேனும் வாகனம் இருந்ததா என்றால் அது குறித்து எனக்குத் தெரியாது.

2. நான் எனது கணவருக்காக வேண்டி நடக்காத சம்பவத்தை நடந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,

இரணியல்.